# SG Digital

## Shopee தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?

ஷாப்பி (Shopee) பலவிதமான சலுகைகளையும் தள்ளுபடிகளையும் காசுகள் அல்லது பற்றுச்சீட்டுகள் வடிவில் வழங்குகிறது. உங்கள் கட்டணத்தை ஈடு செய்ய நீங்கள் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## படிநிலை 1 Shopee செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்

**Apple App Store** அல்லது **Google Play Store** சென்று, **Shopee** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Get**' என்பதைத் தட்டுங்கள்.
2. Android பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Install**' என்பதைத் தட்டுங்கள்.

## படிநிலை 2 Shopee கட்டணமுறைக்குப் பதிவு செய்யுங்கள்
















3. செயலியைத் திறந்து, அடியில் வலது பக்கத்திலுள்ள '**Me**' விசையைத் தட்டுங்கள். பிறகு, மேலே வலது பக்கத்திலுள்ள '**Sign up**' விசையைத் தட்டுங்கள்.
4. உங்கள் **கைப்பேசி** ('Mobile') எண்ணை நிரப்பி, '**Next**' மீது தட்டுங்கள்.

   *** உங்களது ஷாப்பி கணக்கில் நீங்கள் பணம் சேர்க்க விரும்பினால் மட்டுமே தேர்ந்தெடுக்கும் கட்டத்தில் குறியிடுங்கள்.*
5. திரையில் ஒரு கட்டம் தோன்றும். அதிலுள்ள குறியீட்டை அப்படியே உள்ளிட்டு, '**OK**' மீது தட்டுங்கள்.
6. உங்கள் கைப்பேசி எண்ணுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் 6-இலக்கக் மறை எண்ணை ('OTP') உள்ளிட்டு, '**Next**' மீது தட்டுங்கள்.
7. ஒரு **கடவுச்சொல்லை** ('Password') உள்ளிட்டு, 'Sign up' மீது தட்டி, உங்கள் பதிவைப் பூர்த்தி செய்யுங்கள்.

## படிநிலை 3 ஷோபியில் பணம் செலுத்துங்கள்
















8. உங்களுக்கு வேண்டிய பொருளைத் தேடல் கட்டத்தில் தேடி, அந்தப் பொருள்மீது தட்டுங்கள்.
9. அந்தப் பொருளை உங்கள் கூடையில் சேர்க்க, '**Add to Cart**' மீது தட்டுங்கள்.
10. நீங்கள் தேர்ந்தெடுத்த பொருட்களைப் பார்வையிட,மேலே வலக்கோடிமூலையில் காணப்படும் கூடை சின்னத்தின்மீதுதட்டுங்கள்.
11. நீங்கள் வாங்க விரும்பும் பொருட்களில் குறியிட, கட்டத்தின்மீது தட்டுங்கள்.
12. ஆர்டரைநிறைவு செய்வதற்குமுன்,பொருட்களை அனுப்பிவைக்கவேண்டிய முகவரியும் நீங்கள் விரும்பும் கட்டணமுறையும் சரியாக இருப்பதைஉறுதிப்படுத்துங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

*(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு / GoSafeOnline)*

- கடவுச்சொல்லைஅமைக்கும்போது,எண்ணெழுத்துகள் கொண்ட வலுவான கடவுச்சொல்லாக இருப்பதை உறுதி செய்யுங்கள்.
- கடன்பற்றுஅட்டைபரிவர்த்தனைகளின் பாதுகாப்பானபயன்பாட்டுக்காகஉங்களது ஒருமுறைபயன்படுத்தும் மறைச்சொல்லையாரிடமும் வெளியிடாதீர்கள்.
- ஷாப்பியைசம்பந்தப்படுத்தும் மோசடி விளம்பரங்களிடம் எச்சரிக்கையாக இருங்கள். சிலவிளம்பரங்கள் ஒவ்வொருநாளும் நல்லபணம் சம்பாதிக்கக்கூடியவேலைகளை விளம்பரப்படுத்தும். ஆனால்,ஏதோ ஒரு வங்கிக் கணக்குக்கு உங்களது சொந்தப் பணத்தை அனுப்பிவைக்கச் சொல்லும். இத்தகைய விளம்பரங்களின் மூலங்களை நம்பாதீர்கள்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY